රාජ්‍ය පරිපාලන හා ස්වදේශ කටයුතු අමාත්‍යාංශය
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
Ministry of Public Administration and Home Affairs
ග්‍රාම නිලධාරි පාලන අංශය
கிராம அலுவலர் நிர்வாகப்பிரிவு
Grama Niladhari Administration Division

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07. சுதந்திர சதுக்கம், கொழும்பு 07. Independence Square - Colombo 7.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දුරකථන | 2696381 | ෆැක්ස් | | ඊ මේල් | sas-gn@pubad.gov.lk | වෙබ් අඩවිය | www.pubad.gov.lk |
| தொலைபேசி | 2698456 | பெக்ஸ் | 2696381 | இ-தபால் | as-gn@pubad.gov.lk | இணையத்தளம் | |
| Tel | | Fax | | E- mail | itkg-gn@pubad.gov.lk | Web site | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | HAF-3-TRANS-07-027 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 16.08.2010 |

மாவட்ட செயலாளர்கள்,

பிரதேச செயலாளர்கள் அனைவருக்கும்,

**<u>கிராம உத்தியோகத்தர் சேவையின் இடமாற்றங்களுக்கான பொதுக் கொள்கையை அமுல்ப்படுத்தல்.</u>**

1589/30 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைவடிக்கை முறை விதிகளின் அத்தியாயம் XVIII மற்றும் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் III என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைய அமுல்ப்படுத்தப்பட வேண்டிய கிராம உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பாக மாவட்டச் செயலகங்களினாலும், தொழிற்சங்கங்களினாலும் உருவாக்கப்பட்ட பிரேரணைகளைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்ட பொதுக் கொள்கை இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

02. 2011 சனவரியில் இருந்து இப்பொதுக்கொள்கைக்கு அமைய இடமாற்றங்களை அமுல்ப்படுத்தும் பொருட்டு, பிரதேச செயலாளர்களினால் பிரதேச செயலகப் பிரிவினுள் இடமாற்ற விண்ணப்பங்களை, ஏற்புடைய மாவட்ட செயலாளரினால் மாவட்டத்தினுள் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கிடையிலான இடமாற்ற விண்ணப்பங்களைக் கோருவதற்கும், அத்துடன் மேலும் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் இடமாற்றக் கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு இடமாற்ற சபைகளை நியமிப்பதற்கும், இறுதியாக இடமாற்ற சபைகளின் பரிந்துரைகளுக்கு அமைய இடமாற்றங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

03. இந்த இடமாற்றக் கொள்கையைப் பின்பற்றுவதற்கு வருடாந்தம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

04. உமது மாவட்ட/ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சகல கிராம உத்தியோகத்தர்களுக்கும். இந்த இடமாற்றக் கொள்கையைப் பற்றி அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

டீ. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,

## கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்கள் - கொள்கைகள்

**அ. இடமாற்ற சபைகளினால் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்களின் பொழுது பின்பற்ற வேண்டிய பொதுக் கொள்கைகள்.**

I. பிரதேச செயலாளர்களின் பிரிவுக்குள்ளான சகல வருடாந்த இடமாற்றங்களும் பிரதேச செயலாளர் பிரிவின் இடமாற்ற சபையின் பரிந்துரைக்கமைய பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மாவட்டத்தினுள் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கிடையிலான இடமாற்றங்கள், மாவட்ட இடமாற்ற சபைகளின் பரிந்துரைக்கமைய மாவட்ட செயலாளரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதேவேளை, மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றங்கள், அமைச்சின் இடமாற்ற சபையின் பரிந்துரைக்கமைய அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

II. விசேட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த, சகல இடமாற்றங்களும் சனவரி 1 ஆம் திகதியில் இருந்து செயல்வலுப் பெறுதல் வேண்டும்.

III. குறிப்பிட்ட பிரிவொன்றில் மூன்று வருடங்களைப் பூர்த்திசெய்த கிராம உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களுக்கு விண்ணபிப்பதற்கு உரித்துடையவர்களாவார்கள். ஒரே பிரிவில் ஐந்து வருடங்கள் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் பின்வரும் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட விதிவிலக்குகளுக்கு உட்பட்டு பிரதேச செயலாளர் பிரிவிற்குள்ளான பிறிதொரு பிரிவுக்கான இடமாற்றத்திற்கு உட்படுதல் வேண்டும்.

IV. பிரதேச செயலாளர்கள் பிரிவு மட்டத்தில் நியமிக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் நிரந்தர சேவை நியமனத் திகதியிலிருந்து மூன்று வருடங்களைப் பூர்த்திசெய்யும் வரை இடமாற்றங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவர்களாகார்.

V. ஒரே பிரிவில் ஐந்து வருடங்கள் சேவையாற்றிய உத்தியோகத்தர்களைக் கட்டாயமாக இடமாற்றம் செய்தல் வேண்டும். அத்துடன் பிரபல்யமற்ற சேவை நிலையமொன்றில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களுக்கு விண்ணபித்திருப்பின் அவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

VI. பிரபல்யமற்ற சேவை நிலையமொன்றில் மூன்று வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலங்கள் வரை சேவையாற்றுகின்ற உத்தியோகத்தரொருவர் பிரபல்யமான சேவை நிலையமொன்றுக்கு இடமாற்றம் கோரி விண்ணபிக்கும் போது, ஐந்த வருடங்களுக்கு மேலாக அப்பிரிவில் சேவையாற்றும் உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் பிரிவுக்குள்ளான பிறிதொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

VII. இடமாற்ற விண்ணப்பங்கள், இடமாற்றம் செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு முன்னரே கோரப்படுதல் வேண்டும்.

VIII. உத்தியோகத்தருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் ஏற்படும் அசௌகரியங்களைக் குறைக்கும் பொருட்டும், இடமாற்றம் இடர்பாடற்ற செயற்பாடொன்றாக அமைவதை உறுதிப்படுத்தும் பொருட்டும், உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களுக்கு விண்ணபிக்கும் பொழுதும் அவர் விண்ணபித்த பிரிவுக்கு மேலதிகமாக மூன்று மாற்றுப்பிரிவுகளைக் குறிப்பிடுதல் வேண்டும்.

IX. இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது உத்தியோகத்தர் வதியும் பிரிவை அல்லது சாத்தியமான வரையில் அருகில் உள்ள பிரிவைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

X. பிரபல்யமான பிரிவொன்றில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் தவிர்ந்த, 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு விண்ணபிக்காவிடின் அவ் உத்தியோகத்தர்கள் தற்போதைய பிரிவில் அவர்கள் ஓய்வு பெறும் வரை சேவையாற்றுவதற்கு அனுமதி வழங்குதல் வேண்டும்.

XI. இடமாற்றம் மேற்கொள்ளும் போது, சாத்தியமானவரையில் பிரிவில் பெரும்பான்மையினர் பயன்படுத்தும் மொழியில் தனது கடமைகளை நிறைவேற்றும் திறமையைக் கொண்டுள்ள உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வெண்டும். மேலும் உத்தியோகத்தர்களுக்கு முறையான மொழிப்பயிற்சிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

XII. சேவையின் பொருட்டு இணைக்கப்பட்ட பிரிவில் இருந்து உத்தியோகத்தரொருவரின் வெளிமாவட்ட இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைக் காரணங்களுக்காக, சேவையின் அவசியத்தன்மை, அல்லது உத்தியோகத்தரின் விருப்பம் தொடர்பில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

XIII. இடமாற்றம் செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்கு முன்னர் உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒரு மாத முன்னறிவித்தல் கொடுக்கச் சாத்தியமற்றவிடத்து, உத்தியோகத்தரின் கோரிக்கையின்றி பிரதேச செயலாளர் பிரிவுகளுள் இடமாற்றம் செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு பிரயாணச் செலவுகளும், ஏனைய படிகளும் வழங்கப்படுதல் வேண்டும்.

XIV. குறிப்பிட்ட பிரிவொன்றில் சேவையாற்றும் கிராம உத்தியோகத்தரொருவர் முக்கியமான காரணங்கள் தவிர்ந்த, அதே சேவை நிலையத்திற்குத் திரும்பவும் இடமாற்றத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது.

XV. இடமாற்றங்களில் திருப்தியற்ற உத்தியோகத்தர் பின்வரும் முறையில் அவர்களுடைய மேன்முறையீடுகளை முன்வைத்தல் வேண்டும். பிரதேச செயலாளர் பிரிவுக்குள் இடம்பெறும் இடமாற்றங்கள் தொடர்பிலான மேன்முறையீடுகளை மாவட்ட மேன்முறையீட்டுச் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றங்கள், தொடர்பிலான மேன்முறையீடுகள் அமைச்சில் உள்ள மேன்முறையீட்டுச் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இடமாற்றக் கட்டளைகளை அமுல்ப்படுத்தல் பொருட்டு மாவட்ட மேன்முறையீட்டுச் சபையின் பரிந்துரைகளுக்கு அமைய மாவட்ட செயலாளரினால் பிரதேச செயலாளர்களுக்கும், அமைச்சில் உள்ள மேன்முறையீட்டுச் சபையின் பரிந்துரைகளுக்கு அமைய அமைச்சின் செயலாளரினால் மாவட்ட செயலாளருக்கும் அறிவித்தல் வேண்டும்.

XVI. தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் இடமாற்ற சபையில் பங்குபற்றுவதற்கு உரித்துடைய கிராம உத்தியோகத்தர்களின் சகல தொழிற்சங்கங்களுக்கும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

XVII. அரசாங்கத்திற்குக் குறைந்த செலவுகள் ஏற்படும் வகையிலேயே இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

XVIII. மேலே கூறப்பட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இடமாற்ற சபைகளின் பரிந்துரைகளுக்கு அமைய வருடாந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

## ஆ. நிர்வாகக் கிராம உத்தியோகத்தர்களின் இடமாற்றக்கொள்கை:

I. மாவட்டங்களுக்குள் பிரதேச செயலாளர்களுக்கிடையில் அல்லது மாவட்டங்களுக்கிடையில் நிர்வாகக் கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்கள் இடமாற்ற சபை மற்றும் மாவட்ட செயலாளரின் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு அமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

II. விசேட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த, சகல இடமாற்றங்களும் சனவரி 1 ஆம் திகதியில் இருந்து செயல்வலுப் பெறுதல் வேண்டும்.

III. குறித்தவொரு பிரதேச செயலாளர் பிரிவொன்றில் மூன்று வருடங்களைப் பூர்த்திசெய்த கிராம உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவர்களாவார்கள். ஒரே பிரிவில் ஐந்து வருடங்கள் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் பின்வரும் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட விதிவிலக்குகளுக்கு உட்பட்டு மாவட்டங்களுக்குள் பிறிதொரு பிரிவுக்கு அல்லது மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றத்திற்கு உட்படுதல் வேண்டும்.

IV. ஒரே பிரிவில் ஐந்து வருடங்கள் சேவையாற்றிய உத்தியோகத்தர்களைக் கட்டாயமாக இடமாற்றம் செய்தல் வேண்டும். அத்துடன் பிரபல்யமற்ற சேவை நிலையமொன்றில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களுக்கு விண்ணப்பித்திருப்பின் அவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். மாவட்ட இடமாற்றச் சபையானது பிரபல்யமற்ற சேவை நிலையங்கள் தொடர்பாகத் தீர்மானித்தல் வேண்டும்.

V. பிரபல்யமற்ற பிரதேச செயலகமொன்றில் மூன்று அல்லது அதற்குக் கூடிய வருடங்கள் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தரொருவர் பிரபல்யமான சேவை நிலையமொன்றிற்கு இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கும் பொழுது ஐந்து வருடங்களுக்கு மேலாக அப் பிரிவில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர் பிறிதொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

VI. உத்தியோகத்தருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் ஏற்படும் அசௌகரியங்களைக் குறைக்கும் பொருட்டும், இடமாற்றம் இடர்பாடற்ற செயற்பாடொன்றாக அமைவதை உறுதிப்படுத்தும் பொருட்டும், உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுதும் அவர் விண்ணப்பித்த பிரதேச செயலாளர் பிரிவுக்கு மேலதிகமாக மூன்று மாற்றுப்பிரிவுகளைக் குறிப்பிடுதல் வேண்டும்.

VII. இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது உத்தியோகத்தர் நிரந்தரமாக வதியும் மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவை அல்லது சாத்தியமான வரையில் அருகில் உள்ள பிரிவைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

VIII ஒழுக்காற்றுக் காரணங்கள் அல்லது சேவையின் அவசியத்தன்மை போன்ற சந்தர்ப்பங்கள் தவிர்ந்த பிரபல்யமான சேவை நிலையமல்லாத பிரதேச செயலாளர் பிரிவொன்றில் சேவையாற்றும் 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் தற்போதைய பிரிவில் அவர்கள் ஓய்வு பெறும் வரை சேவையாற்றுவதற்கு அனுமதி வழங்குதல் வேண்டும்

இ). இடமாற்ற சபைகள்

<u>பிரதேச செயலாளர் பிரிவின் இடமாற்ற சபை</u>

**தலைவர்** - பிரதேச செயலாளர்

**உறுப்பினர்கள்**

1. உதவிப் பிரதேச செயலாளர்/ நிர்வாக உத்தியோகத்தர்/ நிர்வாக கிராம உத்தியோகத்தர்/
2. கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்கங்கப் பிரதிநிதிகள்

**பங்களிப்பு**

1. பொதுக் கொள்கைகள் தொடர்பாக பிரதேச செயலாளர் பிரிவுக்குள் இடமாற்றங்களை மேற்கொள்வதில் பின்பற்ற வேண்டிய மூலப் பிரமாணங்களின் தயாரிப்பு
2. பிரபல்யம் வாய்ந்த மற்றும் பிரபல்யமற்ற பிரதேச செயலாளர் பிரிவுகளை இனங்காணல்.
3. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கொள்கைகள், ஒழுங்கு விதிகளின் பிரகாரம் பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வருடாந்த இடமாற்றங்களை அமுல்ப்படுத்துவதற்கு பிரதேச செயலாளருக்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்.

<u>மாவட்ட இடமாற்ற சபை/ மாவட்ட மேன்முறையீட்டுச் சபை</u>

**தலைவர்** - மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட செயலாளர்

**உறுப்பினர்கள்**

1. மாவட்ட செயலகத்திற்கு இணைக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர்/ நிர்வாக உத்தியோகத்தர்/
2. கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்கங்கப் பிரதிநிதிகள்

**பங்களிப்பு**

1. பொதுக் கொள்கைகளின் பிரகாரம் மாவட்டங்களுக்குள் இடமாற்றங்களை மேற்கொள்வதில் பின்பற்ற வேண்டிய மூலப் பிரமாணங்களின் தயாரிப்பு
2. பிரபல்யம் வாய்ந்த மற்றும் பிரபல்யமற்ற பிரதேச செயலாளர் பிரிவுகளை இனங்காணல்.
3. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கொள்கைகள் ,ஒழுங்கு விதிகளின் பிரகாரம் மாவட்டங்களுக்குள் கிராம உத்தியோகத்தர் மற்றும் நிர்வாகக் கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்களை அமுல்ப்படுத்துவதற்கு மாவட்ட செயலாளருக்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்.
4. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கொள்கைகள், ஒழுங்கு விதிகளின் பிரகாரம் பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வருடாந்த இடமாற்றங்களை அமுல்ப்படுத்துவதற்கு பிரதேச செயலாளருக்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்.

<u>அமைச்சின் இடமாற்ற சபை:</u>

**தலைவர்** - சிரேட்ட உதவிச் செயலாளர்(நிர்வாகக் கிராம உத்தியோகத்தர்)

**உறுப்பினர்கள்**

1. பதவிநிலை உத்தியோகத்தர்
2. கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்கங்கப் பிரதிநிதிகள்

**பங்களிப்பு**

1. பொதுக் கொள்கைகளின் பிரகாரம் மூலப் பிரமாணங்களின் தயாரித்தலும், அவர்களது வேண்டுகோள்களைக் கருத்திற்கொண்டு கிராம உத்தியோகத்தர் மற்றும் நிர்வாகக் கிராம உத்தியோகத்தர்களின் வேண்டுகோள்களை அமுல்ப்படுத்துவதற்கு அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளுதலும்

<u>இடமாற்றங்களின் மீதான அமைச்சின் மேன்முறையீட்டுச் சபை</u>

**தலைவர்** - மேலதிகச் செயலாளர்(உள்நாட்டலுவல்கள்)

**உறுப்பினர்கள்**

1. உள்நாட்டலுவல்கள் பிரிவின் சிரேட்ட உதவிச் செயலாளர்
2. கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்கங்கப் பிரதிநிதிகள்

**பங்களிப்பு**

1. மாவட்டங்களுக்குள் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கிடையில் கிராம உத்தியோகத்தர் மற்றும் நிர்வாகக் கிராம உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை இடமாற்றங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகளைக் கருத்திற்கொண்டு செயலாளருக்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்.
2. அமைச்சின் இடமாற்ற சபையின் பரிந்துரைகளுக்கு அமைய மாவட்டங்களுக்கிடையில் அமுல்ப்படுத்தப்பட்ட இடமாற்றங்களைக் கருத்திற்கொண்டு செயலாளருக்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்.

<u>ஈ). இடமாற்ற சபையின் பரிந்துரைகள் தேவைப்படாத இடமாற்றங்கள்:</u>

பின்வரும் காரணங்களில் ஒன்று அல்லது பலவற்றின் மீதான அடிப்படையில் இடமாற்ற சபைகளின் அங்கீகாரம் பெறப்படாமல் உத்தியோகத்தர்களை உரிய அதிகாரிகள் இடமாற்றம் செய்ய முடியும்.

1. ஒழுக்காற்றுக் காரணங்கள் மீதான இடமாற்றங்கள்
2. சேவை அவசியத்தன்மை மீதான இடமாற்றங்கள்.
3. உத்தியோகத்தர்களின் வேண்டுகோள்களின் மீது உருவாக்கப்படுகின்ற பரஸ்பர இடமாற்றங்கள்.